# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2115/10 - 2019 මාර්තු මස 18 වැනි සඳුදා - 2019.03.18

*2115/10 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரை மற்றும் 46(1) (அ) ஆகிய உறுப்புரைகளின் வண்ணம், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2018 திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2019 மாச்சு மாதம் 18 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் தருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2019, மாச்சு 16.*

**அட்டவணை**

*(1) அவ்வறிவித்தலில் இல. (3) "தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-*

*(அ) அதன் இல. (3) எனும் தலைப்பானது, "தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர்" எனவும் ;*

1A - G 29697 — 392 (2019/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயமானது-

1. "தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் விடயம் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்" எனவும் ;

(இ) அதன் நிரல் I இல் 22 இலிருந்து 25 வரையுள்ள விடயங்களை நீக்குவதன்மூலம் ;

(ஈ) அதன் நிரல் I இல் 21 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம் ;

(உ) அதன் நிரல் II இல் 14 இலிருந்து 24 ஆவது வரையுள்ள விடயங்களை நீக்குவதன்மூலம் ;

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள கீழ்க்காணும் விடயங்களை நீக்குவதன்மூலம் :

- (1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை அச்சக நிறுவகச் சட்டம்
- (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டம்
- (1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம்
- (1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம்
- (2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இலங்கை கடல்சார் பல்கலைக்கழகச் சட்டம்

(2) அவ்வறிவித்தலில் இல. (31) "அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் 10 மற்றும் 11 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம் ;
(ஆ) அதன் நிரல் I இல் 9 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம் ;
(இ) அதன் நிரல் II இல் 1 எனும் விடயத்தை நீக்குவதன்மூலம் ;
(ஈ) அதன் நிரல் II இல் 2 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம் ;

(3) அவ்வறிவித்தலில் இல. (13) "கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத் துறை அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் இல. (13) எனும் தலைப்பானது, "கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயமானது-

1. "கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி என்னும் விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்" எனவும் ;

(இ) அதன் நிரல் I இல் 10 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம் :

11. நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களை மீண்டும் குடியமர்த்துதல் தொடர்பான நடவடிக்கைகள்.

12. பாடசாலை விடுகையின் பின் பல்கலைக்கழகக் கல்விக்குத் தகைமை பெறாத மாணவர்களுக்குத் தொழில்கல்வி வாய்ப்புக்களை விரிவாக்கக் கூடியவாறான கொள்கைகளைத் தயாரித்தலும் வசதிகளை அளித்தலும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

13. தொழில் சந்தைக்கு ஏற்ற உழைப்புப் படையினை உருவாக்குவதற்காக இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை நவீனமயப்படுத்துதல்.

14. பயிலுநர் பயிற்சி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.

15. தொழில் கல்வியின்பால் உள்ள ஈடுபாட்டை உயர்த்துவதற்குரிய உபாய முறைகளை ஆக்குதலும் செயற்படுத்துதலும்.

16. வெளிநாடுகளில் இலங்கை வர்த்தக நடவடிக்கைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.

17. வர்த்தகக் கண்காட்சிகளை நடாத்துதல்.

18. அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுடன் இணைந்து சர்வதேச வர்த்தக உறவுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) அதன் நிரல் I இல் 18 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம் ;

(உ) அதன் நிரல் II இல் 31 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம் :

32. மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு
33. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
34. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
35. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்
36. இலங்கை - ஜேர்மனி தொழினுட்பப் பயிற்சி நிறுவகம்
37. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்த நிறுவனங்கள்
38. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
39. இலங்கை அச்சக நிறுவகம்
40. தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்றுறை பொறியியல் நிறுவகம் (கடல்சார் பல்கலைக்கழகம்)
41. தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
42. இயந்திரவியல் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
43. வாணிபத் திணைக்களம்

(ஊ) அதன் நிரல் III இல் "(1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) புடவைப் பங்குச் சபைச் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம் :

- (1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை அச்சக நிறுவகச் சட்டம்
- (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டம்
- (1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம்
- (1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம்
- (2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இலங்கை கடல்சார் பல்கலைக்கழகச் சட்டம்

04-95

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.